
12-வது பதினெண் சித்தர் பீடாதிபதி


11-வது பதினெண் சித்தர் பீடாதிபதி



மெய்ஞ்ஞானக்கொடி



இந்துமதத் தந்தை
குருமகா சன்னிதானம்
ஞாலகுரு சித்தர் கருவூரர்



தஞ்சைப் பெரிய
கோயிலைக் கட்டிய சித்தர்
காவிரியாற்றங்கரைக் கருவூரர்

---

# குருதேவர்

(காணிக்கை ரூ. 1—00)

---

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை 13

[உறுப்பினர்களுக்கு மட்டும்] இ. ம. இ. பதிவு எண்: 135/83

## அருள்வாசகம்

## 1985-ஆம் ஆண்டு வாழ்த்துக் கவிதை

"புத்தாண்டு ஆங்கிலேயருடையது அவணியெல்லாம் விழாவாகிறது.
எத்திசையோரும் ஏற்றுப்போற்றுவது போலவே போற்றுகிறோம்
இத்திருநிலை தமிழ்ப்புத்தாண்டு பெற்றிடவே ஏற்போமுறுதி
நினைத்தவர் வதைத்துத்துவைத்து அழித்திடத் தமிழினம்
இத்தரணியெலாம் கூலியாய் ஏமாளியாய் வேலியிலாப்பயிராய்
இனத்துரோகி விரோதி கங்காணிகளால் வாழ்வதைத் தடுப்போம்
தன்னலப்போலிக் கூலித் தலைவர்களே தமிழின வீழ்ச்சி தாழ்ச்சி
என்றுணர்ந்தே கருவறை ஊழியரான பூசாறி, பட்டர். குருக்கள்
என்போரனைவரும் திரட்டியருட்போரால் இருளகற்ற ஒளியேற்றப்
புத்தாண்டில் உறுதி பூண்போம் ஒத்துழைப்பீர் ஏந்துநல்குவீர்.

ஞாலகுரு சித்தர் கருவூரர்,

## விநாயகர் = பிள்ளையார் ≠ கணபதி

சித்தர்களின் நூல்களிலும் அநுபூதி மான்களின் வாக்குகளிலும் குருபாரம்பரிய வாசகங்களிலும் மேற்படி பிள்ளையார், விநாயகர் கடவுள்களும், கணபதி கடவுளும் 1) 6 வயது 2) 12 வயது 3) 18 வயது 4) 27 வயது 5) 32 வயது 6) 36 வயது 7) 48 வயது 8) 64 வயது 9) 81 வயது 10) 96 வயது 11) 108 வயது 12) 120 வயது என்று பன்னிரண்டு பருவநிலை கடவுளர்கள் இருப்பதாக தெளிவான செய்திகள் இருக்கின்றன. எனவே ஆரியர்களுடைய கற்பனைப்படி எதிர்பாராமல் **பரம சிவனின் மனைவி பார்வதி உண்டாக்கிய சிறுவனுடைய தலையை வெட்டிவிட்டு யானையின் தலையை வைத்து உண்டாக்கப்பட்ட திடீர் கடவுளல்ல மேற்படி பிள்ளையார், விநாயகர், கணபதி எனப்படுவோர்;**

வட ஆரியர்கள் பிள்ளையார், விநாயகர் என்ற கடவுளையும் கணபதி என்ற கடவுளையும் ஒன்றாகக் கருதும் மாபெரும் தவறைச் செய்வதோடு; இவர்கள் இரண்டு பேர்களும் ஆண் கடவுள்கள் என்று மட்டுமே நினைக்கின்றார்கள் சித்தி நிலை பெற்ற ஆண், பெண் இருபாலாருமே பிள்ளையாராக, விநாயகராக, கணபதியாக வாழ்ந்து மறைந்து பெருநிலையெய்துள்ளனர். இந்த உண்மையை உணராத ஆரியர்கள் பத்தி, சத்தி, முத்தி, சித்தி, சித்து விளையாடல் எனும் ஐந்து நிலைகளில் எந்தவொரு நிலையும் வெற்றி பெற முடியாததாகவே இருந்து வருகிறது.

பிள்ளையார் = விநாயகர் மற்றும் கணபதி என்ற கடவுளுக்கும் பெண் வடிவங்கள், அதாவது சத்தி வடிவங்கள் உண்டு! அவர்களின் வயது, வடிவம், பெயர் முதலியவைகள் குருவழியாக தெரிந்துகொள்ளக் கூடிய **'மறைகள்'** (இரகசியங்கள்) இவற்றைத் தெரிந்துகொள்ள முடியாத காரணத்தினால்தான் வட ஆரியர்கள் 'பதினெண் சித்தர்கள்' படைத்த எல்லா வழிபாட்டு நிலையங்களிலும் தங்களுடைய செத்துப் போன சமசுக்கிருத மொழியில் பூசை செய்யும் முறைகளை உண்டாக்கி தங்களைப் போல் பிறரும் பூசையால் எள் முனையளவு கூட பயனடைய முடியாமல் செய்து விட்டார்கள். இதன் முழு விளக்கத்தை பதினெண் சித்தர் பீடாதிபதிகளாலும், அவர்களின் வாரிசுகளாலும்தான் உணர உணர்த்த முடியும் எனவே இந்த பெண் பிள்ளையார்களையும், விநாயகர்களையும் கணபதிகளையும் புத்துயிர்ப்புச் செய்தால் போதும் வட ஆரியர்களின் கொட்டமடங்கி விடும் ...... அமராவதியாற்றங்கரைக் கருவூரூரின் வாசகம்

[இது போன்ற அருளுலக இருள் அகற்றுதலே உண்மையான சமுதாய மறுமலர்ச்சிக்கு வழி வகுக்கும்]

பதினெண் சித்தர்கள் மனிதத்தலையும், யானை உடம்பும் உடைய கணபதி தனது சத்தியை எப்பொழுதும் தனது வலது தொடையின்மீதுஅமர்த்திநாளோலகத்தில் அமர்ந்திருப்பார்என்றும்; இவரே **'வல்லப கணபதி'** என்றும் இவரே பல தேவ-அசுரப் போர்களைச் செய்து முடித்தார் என்றும், இவர் பலசிவன்களாலும், திருமால்களாலும், பிறமன்களாலும், இந்திரர்களாலும் வழிபடப்பட்டார் என்று குறிக்கின்றனர்.

[-எனவே 'வல்லபை கணபதி' பற்றி தற்காலத்துக் கூறும் கருத்துக் தவறானதே]

பதினெண் சித்தர்கள் ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தியில் கணபதிக்குரிய புத்துயிர்ப்பு நாளாக பிறப்பு நாளக, அருளாட்சி நாளாக அறிவித்திருக்கிறார்கள் எனவே தற்போது வழக்கத்தில் கொண்டாடும் நன்னாள் கணபதி சதுர்த்தியே அன்றி, **விநாயகர் சதுர்த்தி அல்ல!**

# குருதேவர்

[இ ம. இயக்க அறிக்கை]



சொல்லடி நாயனுர்
பெரியார் ஈ.வெ.ரா.



போத்தர் மோகன்தாசு
கரம்சந்த் காந்தி



நவநாத சித்தர்
காரல்மார்க்சு



ஞான சித்தர்
ஆதி சங்கரர்

## வணக்கவுரை!

ஓராண்டை நாம் விரைந்து முடித்து விட்டோம்! நமது அறிக்கையும் பல்வேறு வகையில் மாற்றம் பெற்று இன்று பல் வேறு அரிய செய்திகளை உருகொண்டு வெளிவந்து கொண்டிருக்கின்றது. இதற்கு தாங்கள் அனைவரும் தருகின்ற பேராதரவே காரணம்.

இராமாயணம், மகாபாரதம், புராணங் -கள், வரலாறுகள், இந்து மதச் சடங்கு கள், நெறி முறைகள்..... இவற்றில் காணப்படுகின்ற பல்வேறு முறைகேடுகள், மடமைகள், கற்பனைகள்......... இவற்றை யெல்லாம் தகர்த்து எறிந்து மக்களுக்கு உண்மையான செய்திகள் 'பன்னி ரெண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி' காலத்திலாவது வெளிவர வில்லையென்ருல் இனிஎன்றும் வெளிவராது.

வடஆரியர்கள் புகுத்திவிட்ட மடமை களால் இருண்டுவிட்ட இந்து மதத்தில் நம்பிக்கையிழந்துப் போய்விட்ட இந்துக் கள் இனியாவது உணர்ந்து உண்மையை யேற்று செயல் படுவார்களாக!

ஆட்சி செய்வோர் மாறுவதால் மக்களின் தேவைகள் நிறைவு பெருது. சமுதாய மாற்றமே அனைத்து நலிவுகளை யும் நீக்கும் சமுதாயமாற்றம் நிகழ வேண் டுமேயானல் சமுதாய இருள் நிலைகள் விலகவேண்டும் சமுதாய இருள் நிலைகள் சமயத்தினுல் மட்டுமே உருவாக்கப்படு கின்றன, எனவே, அருளுலக இருளகற்று வோம்! இவ்வாண்டில் நாம் மேலும் மேலும் வளர்ச்சியடைவோம்!

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

—சி. கவிக்குமார்

ஆண்டு 2 அறிக்கை 1 வெளியீடு 26-1-85
இ. ம இ பதிவுஎண் 135/83
[பண்பாட்டுக் கழகம]

ஆசிரியர் குழு:-
இ.ம.இ; அ.வி.தி; க.வ.க; அ.ஆ.க; உ.ம.ஆ.கு. முதலியவற்றின் வட்டாரத் தலைவர்கள்.

தொடர்பு:

1. பரமாச்சாரியார்: நெ. சேவுகன்
C/o. காதிவசுத்திராலயம்
கொட்டாம்பட்டி, (P. O.)
மதுரை-625 103.

2. பிறமாச்சாரியார்:
சி. கவிக்குமார் B.Sc.,
56, N.G.O காலனி
பொன்னேரி-601 204.

3. தெய்வீகாச்சாரியார்:
சோ. இரவீந்திரன்
C/o. சித்தர், E.S.I. செம்பியம்
பெரம்பூர், சென்னை-600 011.

# அன்புள்ள சேவகன்

## கண்ணன் மனம் அனல் புனலே

*அன்புச் சேவக!*

மிகப் பெரிய கடிய கொடிய நெடிய இடைவெளிக்குப் பிறகே ஆரிய மாயைமிகு சூழ்ச்சிகள் எனும் காட்டாற்று வெள்ளத்தில் மூழ்கித் தத்தளிக்கும் தமிழினத்தைக் காப்பாற்றும் பணி எம் தந்தையால் நேரடியாகத் துவக்கப்பட்டது. ஆனால், அவரோ. கரையில் நின்றபடி என்னையனுப்பி மூழ்கும் எமது தாயினமாம் தமிழினத்தைக் காப்பாற்ற அனுப்பி விட்டார்; நீருள் மூழ்குகிறவனோ என்னையும் சேர்ந்து நீருக்குள் முழ்கடிக்கவே முதலைப்பிடி போட்டு விட்டான். என்ன செய்வது? எப்படியும் நான் பிறந்த இனத்தைக் காப்பாற்றும் போராட்டத்தில் பெரு வீரம் காட்டி ஈடுபட்டு விட்டேன்.

''......பதினெண் சித்தர்கள் படைத்த இந்து மதத்தை விளக்கும் மாபெரும் சாதனங்களே சிவன். திருமால், பிறமண், இந்திரன். தேவேந்திரன், இயமன். முருகன், இராமன், கண்ணன்... முதலியோரின் வரலாறுகள். ஆனால். ஆரியர்கள் தங்களது சூழ்ச்சியால், பொய்யால், புளுகால், கற்பனையால், மாயா வாதத்தால்......மேற் கூறிய அனைத்து வரலாறுகளையும் தமிழர்களே வெறுக்கவும், மறுக்கவும், எதிர்க்கவும் நகைக்கவும், பகைக்கவும், பழிக்கவும்...... செய்யுமாறு செய்திட்டனர். இம் மாபெரும் சதியால் இந்து மதத்தின் ஆணி வேரான பெண் வழிச் சித்திப் பூசை, கன்னிப் பூசை, பாவைப் பூசை, மங்கைப் பூசை. நங்கைப் பூசை, குமரிப் பூசை.........எனும் பூசைகள் அனைத்தும் கேலிக்கும் கிண்டலுக்கும் கேவலத்துக்கும் உரியவையாக்கப்பட்டுத் தமிழர்கள் அருளுலகச் சித்திகளை நாடவே முடியாத நிலைகளை உருவாக்கி விட்டனர் ஆரியர்.

இம்மாபெரும் ஆரிய வெற்றியால் வீழ்ச்சி பெற்ற தமிழர் அருளுலக விழிச்சியோ! எழுச்சியோ! செழுச்சியோ!........ பெறவே முடியாமல் போய்விட்டது. பாரதப் போரை வென்ற கண்ணன் தன் வாழ்வில் சந்தித்த பெண்களை யெல்லாம் பெண்டாட்டியாக்கிக்' கொண்டானென்று கூறி அவனைத் தமிழர் தூற்றிப் பழித்துத் துறக்கச் செய்தனர் ஆரியர். ஆனால், உண்மை யென்ன?........

கண்ணன் பகதத்தன் பட்டணத்திலிருந்து கொணர்ந்த பதினாறு ஆயிரத்து அறுநூறு பெண்களையும்; நாகாசுரன் பட்டணத்திலிருந்து கொணர்ந்த பதினாறுயிரம் பெண்களையும்; முராசுரனின் பத்துப் பெண்களையும்; இராதை, உருக்குமணி, சாம்பவதி, சத்தியபாமா, காளந்தி. மித்திரவிந்தை, சத்தியவதி, பத்திரை. இலக்குமணை. நப்பின்னை எனும் பத்துப்பெண்களையும் ஆகமொத்தம் [11,600+16.000+00010 +00010-27.620] இருபத்தேழாயிரத்து அறுநூற்று இருபது பெண்களை மணந்து போக இன்பம் துய்த்துப் போகியாகவும்; ஒன்பது கோடிக் கோபியர்களைத் தழுவி இட்டும் தொட்டும் சுட்டியும் அருளின்பம் வழங்கி யோகியாகவும்; பஞ்ச பாண்டவர், வீடுமர், வியாசர் முதலிய எண்ணாயிரவரும்; பாரதப் பெரும் போரின் பதினெட்டுக் கோடி அக்குரோணி சேனையினரும் தன்னைக் கண்டாலும், கருத்தில் நினைத்தாலும் மோகித்து ஞான அமுதம் பருகி மயங்குமாறு செய்து யோகியாகவும் வாழ்ந்தான். இப்படிப் பட்ட இவனைப் புரியமுடியாத துரியோதனாதிகள் நூறு பேர், சிசுபாலன் குடும்பத்தார் நூறுபேர்......... என்று பல ஆயிரம் நூற்றுவர்கள் தூற்றினார்கள்! தூற்றினார்கள்! தூற்றினார்கள்! ஆனாலும இவன் சந்திர குலத்துக்குரிய எந்தரீக தாந்தரீகப் பூசைகளைச் செய்து ஏழு பருவத்துப் பாவையரும் தாயாக, தாரமாக. தானீன்ற மகளாக உயர்நிலை நின்று வழங்கிய சத்தியாலேயே பாரதப் போர் முடித்தான்.

இவன் கடமை வீரன் என்பதால் பஞ்ச பாண்டவர்க்கு நீதி கேட்கும் போரைப்பார் முழுதுமுள்ள வீரர்கள் திரண்டு போரிடும் பேரழிவுக்குரிய பாரதப் போராக

[பார்+அதம்+போர்—▷ இம்மண்ணுலகில் மிகப்பெரிய அழிவை நல்கிய போர்] நிகழ்த்தினன். இதற்காக இவன் தனது திருத்தோற்ற இறையாற்றல்கள் அனைத்தையும் செலவிட்டான். ஆனல் தங்கை சுமத்திரை அபிமன்யுக்காகவும்; திரௌபதி தானீன்ற இளம்பஞ்ச பாண்டவர்க்காகவும் நாக கன்னி தன்மகன் அரவானுக்காகவும் இருபத்தேழாயிரத்து அறுநூற்று இருபது மனைவியரும் தங்களுக்குக் கண்ணனின் முழுஅன்பு கிடைக்காத ஏமாற்றத்தினலும் கர்ணன் தன்னழிவுக்காகவும், காந்தாரியும் திருதராட்டினரும் தங்கள் மக்களின் மரணத்துக்காகவும் அத்திரி மகள் சித்திரை தன் மகன் சீயரதனும் கணவன் வித்தைச் சித்திரனும் கொலையுண்டதற்காகவும்...... சாபம் கொடுத்ததால் துன்புற்று மனம் வருந்தி முப்பத்தாறு ஆண்டுகள் பாரதப் போருக்குப் பிறகு வாழ்ந்து தனது ஏட்டறிவையும், பட்டறிவையும், ஞானத்தையும் ......கதையாக, காதையாக, கவிதையாக, [காவியமாக], கீதையாக [இசைப் பாடலாக]ப் பதினெட்டு வியாசர்களையும் பல நூறு பைந்தமிழ்ப் புலவர்களையும் துணையாகக்கொண்டு எழுதி முடித்தான். ஆனல் அவன் பைந்தமிழில் எழுதியவைகளும், அவனே தமிழினத்தின் சந்திரகுலக்குருவாக வாழ்ந்தான் என்ற பேருண்மையும்... ஆரியரால் சிதைத்துச் சீரழிக்கப்பட்டு மங்கி மறையச் செய்யப்பட்டு விட்டன.

இவற்றையெல்லாம் எண்ணியே பதினெண் சித்தர் பீடாதிபதிகள் 'பெண்ணே அருளுலகின் கண்', 'மங்கை மாதந் தோறும் மலரும் மலர்' 'பெண்ணின்பமே பேரின்பம்'. 'பெண்வழிச் சேரும் வாழ்வே மோக யோக போக வாழ்வு' 'பெண் அருளுலக வழிகாட்டி', 'பெண்ணை மறுந்தோ வெறுத்தோ பெறப் போகும் சித்தி ஏதுமில்லை,' 'பெண்ணை வழிபட்டே சூரிய குலத்தோர் எட்டு சித்திப் பூசைகளையும் சந்திர குலத்தார் பத்துச் சித்திப் பூசைகளையும் செய்யும் மரபு தோன்றிற்று',...... ஆனல், 'எல்லாப் பெண்களும் பூசைக்குப் பயன்பட மாட்டார்கள்,' வாக்கு, மனம், சிந்தை, விதி, ஊழெனும் ஐந்தும் சித்திக்கும் பூவையரே பூசைக்கு வந்த மலர்.' 'கோடிக்கணக்கான கன்னியரில் தேடிச் சிலரையே கண்டு பூசை செய்தே சித்தியுற முடியும்'......என்ற பேருண்மையெல்லாம் மறந்து கடமை வீரன் கண்ணன் காமக் களியாட்டக் கண்ணனுக வசை பாடப் பட்டதால்; பாரதப்போர் வென்றும் அவன் நெஞ்ச நெருப்பு அணையாமல் கனன்று உருகிப் புனலாக ஓடிற்று அன்று, கண்ணனின் கடமை மனம் அனல் புனலாயிற்று என்பதை எண்ணியாவது அருளுலக இருளகற்றும் திருவிழாத் தத்துவத்தைப் பொறுப்போடும் பொறுமையோடும் புரிய முற்படும் அறிவாளர்களை உருவாக்கியே அருட்படை திரட்ட வேண்டும்.

படையில் யானை, குதிரை, தேர், காலாட்படை என நான்கு பெரும்பிரிவினர் உண்டு என்பதல்லாமல்; ஆயுத மேந்தியவர்கள் எல்லாம் வீரர்களாகவோ; படையில் சேரும் அனைவருமே படைத்தளபதிகளாகவோ மாறுவதில்லை. அவரவர் தரம், உரம், திரம், தீரம் வீரம், பாரம்பரியம், பக்குவம், உண்மை, நுண்மை, திண்மை ........முதலியவைகளுக் கேற்பவே வீர வாழ்வும் வெற்றியும் பெறுவர். அதுபோலவே, அருளுலகப் பேருண்மைகளை அனைவருமே சம அளவு தெரியவோ, புரியவோ, செயலாக்கவோ...... முடியாது! முடியாது! முடியாது! என்பதை எண்ணியே அருட்படை உருவாக்க வேண்டும்—'' என்று பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரர் கூறிய பாரம்பரியச் செய்தியையே எனது குரு நிலை விளக்கச் செய்தியாக 1965-ஆம் ஆண்டு முதல் அறிக்கையில் விடுக்கின்றேன்.

அன்பு-

ஞாலகுரு சித்தர் கருவூரர்

# காதணி விழா கொண்டாடும் முறை

வீரம் செறிந்த தமிழ்க் குடும்பத்தினர் தங்கள் குழந்தைகளை **'இறைவனுக்கே'** இந்து மத மூலவர்களுக்கே காணிக்கையாக வளர்த்து ஒற்றைப்பட எண்ணிக்கையுள்ள **ஆண்**டுக் கணக்கில் [1,3,5,7,........ ] குல தெய்வத்தின் திருமுன்னர்கொண்டுசென்று முடியகற்றி (மொட்டையடித்து) நீராட்டி எந்தவித உலக பந்தபாசச் சொந்த சொத்துமின்றி நிறை மன நிலையில் நிறுத்தி காது இரண்டும் குத்திப் பசிய குருதித்துளியைக் கருவறை முன் காணிக்கையாக்கி அருளுலகப் பட்டியலில் தங்களின் குழந்தையையும் இடம் பெறச் செய்வார்கள் - இதுவே **காதணி விழா**-மொட்டையடிக்கும் **விழா**

காது குத்திக் கொள்பவர் சிறுவராக இருந்தால் மொட்டையடித்து நீராட்டி நிர்வாணமாகத் தாய்மாமன் அல்லது மாமன் உரிமையுடையோர் அல்லது தாத்தா முதலியோர் மடியில் அமர்த்தியே காது குத்தவேண்டும். மொட்டையடிக்கும்போது தாய் தந்தை, இந்த உறவுடைய **சின்னம்மா, பெரியம்மா, சித்தப்பா, பெரியப்பா** முறையுடையோர் மடியில் அமரவைத்துத் தான் மொட்டையடித்தல் வேண்டும்.

சிறுவராக அல்லாமல் 5 வயதைவிட் அதிகமானவர்களாக இருந்தால் அவர்கள் மொட்டையடித்து நீராடியபிறகு **'கோடித்துணி' 'புதியதுணிகள்'** அணிந்து கொண்டு காது குத்திக் கொள்ளலாம். ஏனெனில் 'கோடித்துணி' அணிந்திருப்பது நிர்வாண நிலையாகவேக் கருதப்படும்.

சிறுகுழந்தைகளுக்கும், 5 வயது உட்பட்டவர்களுக்கும் மொட்டையடித்து நீராட்டியபின் கோடித்துணி அணிவித்துக் காது குத்துவது தவறில்லை.

காது குத்திய பிறகே தலையில் சந்தனம், பன்னீர், இளநீர், உராய்ந்த வெள்ளியின் நீர் + ஆமை ஓடு + தேன் —> மூளைப் புத்துயிர்ப்பு; அல்லது ஆவி. ஆன்மா. உயிர் எனும் **மூவிலேப் புத்துயிர்ப்பு** தடவ வேண்டும்.

குறிப்பு :

மொட்டையடித்துக் காது குத்துவதின் மூலமே ஆவி, ஆன்மா, உயிர் என்ற மூன்றும் தங்களின் ஊழ்வினை, வினை, ஆள்வினை (விதி) என்ற மூன்றிலிருந்தும். ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றிலிருந்தும் 'முட்டையை உடைத்துக் கொண்டு வெளிவரும் குஞ்சுபோல் வெளிவந்து முளைக்கின்றன.'

இப்படிமுளைப்பவை கருவின் பயனாலும் திருவின் அருளாலும் தக்க குருவைத் துணையாகப் பெற்றுச் செயல்பட ஆரம்பித்திடும். இதனையே பெரியோர்கள், குழந்தைகளைத் திட்டும் பொழுது

''இன்னும் நீ முளைத்து மூன்று இலைக்
கொள்ளவில்லை (அடையவில்லை)''

என்று திட்டுகின்ற மூதுரை, முதுமொழி, பழமொழி குறிப்பாக விளக்குகிறது.

''.........மொட்டையடித்துக் காது குத்தி மூன்றிலை கொண்டவரே (பசு, பத்தி, பாசம்) 1. உயிர் 2. இறை 3. தளை என்று மூன்றையும் துய்த்து உய்வு பெறமுடியும்'' ......என்று குருபாரம்பரியம் குறிக்கின்றது.

## குரு - அரச - இலக்கிய பாரம்பரியங்களின் தத்துவம்

பதினெண் சித்தர்கள் மேற்கண்ட மூன்று தலைப்புக்களில் அவ்வக் கால நிகழ்ச்சிகளைத் தொகுக்குமாறு ஏற்பாடு செய்துள்ளார்கள்,

பதினெண் சித்தர் பீடாதிபதிகள் மேற்கண்ட மூன்று தலைப்புக்களிலும் தங்களின் கருத்துக்களை வெளியிடுகிறார்கள்.

## இம்மூன்று தலைப்புக்களுக்குமுரிய தத்துவம்

'மாணுக்கர்கள்தான் [தொண்டர்கள், பத்தர்கள்......] குருவை நாடித் தேடியலைந்து பயன்படுத்திக் கொள்ள வெண்டும்' — குருபாரம்பரியத் தத்துவம்.

(தொடர்ச்சி11-ம் பக்கம்)

# பதினெண் சித்தர்களின் திருவாசக முன்னுரை

பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி அவர்களால் 'குருதேவர் அறிக்கை' வாயிலாகவும் ஏராளமான விளக்க அறிக்கை வாயிலாகவும் அருளுலக இருட்டடிப்புக்கள் வெட்ட வெளிச்சமாக்கப்பட்டு வருகின்றன அவற்றில் பெரியதொரு முயற்சியாகவே பதினெண் சித்தர்களின் திருவாசகம் வெளி வருகின்றது.

தேவாரம் பாடிய நால்வரில் மறவேள்வி நடத்தி சித்தர் நெறியான இந்து மதத்தை மீண்டும் இம்மண்ணில் நிலைநாட்டிய 'திருஞான சம்பந்தர் - வட ஆரியரல்ல என்ற பேருண்மையும்; அத்வைதத்தை உருவாக்கிய 'ஆதி சங்கரர்' அவர்களும் வட ஆரியரல்ல! தமிழரே! என்ற பேருண்மையையும் தமிழர்கள் முதற்கண் உணர வேண்டும்.

ஞானசம்பந்தர் திருநாவுக்கரசரின் ஆசியோடுபுறப்பட்டு;சைவமதமாம்சித்தர் நெறியின் உண்மைகளை நிலைநாட்டிட மதுரை மாநகர் சென்று சமணர்களுடன் - அனல் - புனல் வாததத்தில் வென்றார். தோற்ற சமணர்கள் தாங்களாகவே மனம் இறுகி கழுவிலேறி இறந்தனரே அன்றி! வட ஆரியர்கள் கூறுவதுபோல் சம்பந்தரோ பாண்டிய மன்னனோ சமணர்களைக்கழுவிலேற்றவில்லை சமயக்குறவர்களான நால்வரிலே மணிவாசகர், சுந்தரர் மற்றும் நாவுக்கரசரைவிட இந்து மதம் தழைத்தோங்க, உண்மையும், சத்தியுமுடைய இந்து மதப் பயன்கள் உலகறியச் செய்யக் கிடைத்திட்ட பெரிய அறிய வாய்ப்பை மதுரையிலே சம்பந்தர் பயன்படுத்திக்கொண்டார்.

பதினெண் சித்தர்கள் படைத்து வகுத்திட்ட மதங்களில் ஒன்றாக சமணமதம் இருந்தபோதிலும்; தற்போது இந்துமத மடாதிபதிகள் எவ்வாறு செயலற்று; உண்மையான பூசை, தவம், வேள்வி, யாகங்களில் முறையானப் பயிற்சியற்று கற்பனையில்—மடமையில்...... மூழ்கியிருக்கின்றனரோ அவ்வாறுதான் அருக மதத்தின் அருளாளர்கள் அப்போது சோம்பி, பயிற்சியற்று இருந்தனர். எனவேதான் திருஞானசம்மந்தரின் அருட்தன்மையை உணரக்கூடமுடியாமல் வாதிட்டுத் தோற்றனர். இந்து மதமும் தழைக்கத் துவங்கியது.

ஆனால் நால்வர் உட்பட அறுபத்து நான்கு நாயன்மார்களில் சொல்லடி நாயனாரைத் தவிர வேறு எவரும் ஆரியரின் வருகையால் பதினெண்சித்தர்களின் இந்து மதத்துக்கு ஏற்படுத்தப்பட்ட நலிவை, இழிவை கண்டிக்கவோ, தடுத்து நிறுத்தவோ முயலவில்லை தந்தை பெரியார் ஒருவர்தான் இம் மாபெரும் பணியை தனியொரு மனிதனாக நின்று போராட்டத்தைத் துவக்கினார். அம்மா பெரும் பணியினைத் தொடரும் வகையில் ஒன்றாகத்தான் உண்மையான ஞான சம்பந்தரின் அருளுலக வீரவரலாற்றை கவிதை வடிவில் இங்கே தருகின்றோம். இக்கட்டுரையே திருவாசகத்தின் முன்னு-ரையாய் தருகின்றோம்.

இப் பேருண்மையின் அடிப்படையில் தான் இந்து மதத்தின் மூலவர்களான 'தமிழர்கள்' உண்மையான மத விழிச்-சியும், தன்மான எழுச்சியும், தன்னம்-பிக்கைச் செழுச்சியும், இன ஒற்றுமையும், மொழிப்பற்றும் பெற்று எழுச்சிப்பெற்றிட முடியும்.

---

**இத்திருநாட்டில் மதப்புரட்சியே சமுதாயப் புரட்சி! அதுவே**

**தனிநபர் விழிச்சி! அரசியல் எழுச்சி! மொழிச் செழுச்சி!**

# 'குருபத்தியே சித்திக்கு வழி:'

**[தொகுத்து வழங்குபவர் பரமாச்சாரியார் நெ. சேவுகன்]**

9, சீவன் முத்தர், 10, சீவன் முத்தியார் 11, உருவ சித்தியார் 12. அருவசித்தியார் 13. அருவுருவ சித்தியார் எனப்படுவர். இவர்களை வழி நடத்த இவர்களுக்கு 1. நான் மறைகள் 2. நான் முறைகள் 3. நானெறிகள் 4. நான் வேதங்கள் எனும் நான்குவகைச் சாத்திறங்கள் பதினெண்சித்தர்களால் படைக்கப்பட்டன.

இச் சாத்திறங்களைப் பயிலும் பள்ளிகளாக நூற்றெட்டுத் திருப்பதிகள், இருநூற்று நாற்பத்து மூன்று சத்தி பீடங்கள், ஆயிரத்தெட்டுச் சிவாலயங்கள் முதலியவைகள் பதினெண்சித்தர்களால் படைக்கப்பட்டன.

தவம், வேள்வி, ஞானம், சித்தம் என்ற நான்கு முறைகளைக் குருவிடம் நேரடியாகக் கற்கும் முறையினையும் பதினெண் சித்தர்கள் படைத்தார்கள்.

மனித வாழ்வு உலகியலில் உழலும் போது சுவை பெறுவதற்காகவே ஆய்கலைகள் அறுபத்து நான்கினையும் பதினெண் சித்தர்கள் படைத்தார்கள்.

இப் பதினெண் சித்தர்களை உலகம் உணர்வதற்காகவே ஆறு சமயங்களையும், நாற்பத்தெட்டு மண்டலப் படிகளையும், தொண்ணூற்றூறு தத்துவங்களையும் படைத்திட்டவர்கள் பதினெண்சித்தர்களே!

கால வேகமும், கருத்துச் சூழலும் பதினெண் சித்தர்களை மறக்கும்படிசெய்யும் போது பதினெண் சித்தர்கள் தோன்றுகிறார்கள். எனவே, நாமெல்லாம் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் காலத்தில் பிறந்துள்ளோம் என்கின்ற போது எவ்வளவு கொடுத்துவைத்தவர்கள் என்பதை உணர வேண்டும்.

தேவையில்லாத நட்பு, உண்மையில்லாத உறவு, ஆசையில்லாத முயற்சி ஊக்கமில்லாத வாழ்வு, ஆர்வமில்லாத பொழுதுபோக்கு ஆற்றலில்லாத பயிற்சி, பயனில்லாத செயல், வீண் ஆரவாரம், ஆடம்பரம், பகட்டு... முதலியவை தேவையில்லாமல்; அடக்கம், அமைதி, உண்மை, பணிவு, ஊக்கம், ஆர்வம், உழைப்பு, நேர்மை... முதலியவற்றால் வாழ்பவரோடு பழகி வாழ கற்றுக்கொள்ள வேண்டும்.

நாம் குருவிடம் அளப்பரிய நம்பிக்கையும் பற்றும் ஏற்பட்டு குருவே எல்லாம் என்று ஏற்றிட்டால்; குருவும், திருவும் ஒன்றென உணரலாம். நாயன்மார்கள் போல் அளவற்ற பத்தியும், நம்பிக்கையும் அறிவால் வளர்த்துக்கொண்டால் வெற்றி இப்பிறவியில் கிடைக்கும். இது உறுதி. சோதனைகள் பல உண்டு, அதில் தேறிடல் வேண்டும். கசப்பு, தளர்ச்சி, அயர்ச்சி, பொறுமை, சந்தேகம், அவநம்பிக்கை... முதலிய பிறரின்போதனை நம்மைக்கெடுத்து விடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை' என்று வாழ்ந்து சென்று இப் பிறவியை வீணுக்கிடல் வேண்டாம். இப் பிறவியில் கிடைதத குருவைப் பயன்படுத்துவது நமது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

எல்லாம் வல்ல இறையருளால் யாவும் இனிதாகட்டும் பரம்பொருளின் பேரொளி படுகின்ற அனைத்துப் பொருட்களும் ஒளி மயமாகின்றன. ஆனால், பிறவிப் பயனும், ஊழ்வினையும், விதியும் இதை உணரமுடியாது குருடராய் வாழும்படி செய்கின்றன எனவே, ''அவனன்றி அணுவும் அசையாது'' ''அவனருளால் அவன்தாள் வணங்கி'' என்ற திரு முறைப்படி வாழும் தரமும், தகுதியும், ''வாழையடி வாழையென வருகின்ற திருவருட் பேறு பெறும் திருக்கூட்டத்தில் இடம்பெறுகின்ற பேரருள் வள்ளலும் ஆகியவரே நமது குருதேவர்.

''தன்னையறிந்தால் தலைவனை யறியலாம்
தலைவனை அறிந்தால் தன்னை யறியலாம்''
''தன்னையறிய ஒரு தந்திறம் சொல்
வெண்ணிலாவே';
''குருவழிக் காண்க;'' ''குருவில்லா
வித்தை பாழ்''

(தொடரும்

# பதினெண் சித்தர் திருவாசகம்

**[காவிரியாற்றங் கரைக் கருவூரின் குருபாரம்பரியம்]**

1. எண்ணியே ஆயகலை நிலைக்கே ஒருவர் குறையாக
2. கண்மணியாம் இந்து மதம் காக்கப் போரிட்டவர்
3. திண்ணிய அருட்சத்தி மீக் கூறப் பெற்ற
4. தண்டமிழ் பாவாணர் நாயன்மார்கள் புகழுரைப்போம்
5. வேண்டிய வரம்தரு சுடலையாண்டி பத்தர்களே
6. மண்டிய மடமை வளர் புத்தர் அமணரோடு போரிட்டார்
7. கொண்ட பத்திக் கடலில் ஆழ்ந்தவரே ஆழ்வார்கள்.
8. விண்டிவர் விவாதப்போர் நாடித் தேடாது பத்தியிலாழ்ந்தனர்.
9. விண்ணூர்ந்த புகழ் அறுபத்து மூவரில் சமயக்குரவரே.
10. நுண்ணிய அருட் போரில் இருளகற்றி ஒளியேற்றினர்
11. பண்ணுக்குரிய பாடல்களால் பரமசிவனை வென்றனர்
12. சுந்தரர் உலகியலை வென்று அருளாட்சி செய்தார்
13. திருநாவுக்கரசர் சூதுச் சமணரை வென்று அருளாட்சி செய்தார்
14. திருஞான சம்பந்தர் வாதுச் சமணரை வென்று அருளாட்சி செய்தார்
15. மாணிக்க வாச்கர் விவாதப் புத்தரை வென்று அருளாட்சி செய்தார்
16. தெய்வத் தமிழால் அருளாட்சி புரிந்த இச்சமயக் குரவரில்
17. பாலுணவுண்ட பாலகனைப் பத்திப் பணிக்குப் புறப்பட்ட
18. வேலுடையண்ணல் குலத்து அந்தணன் சீர்காழி
19 சிவபாத இருதயச் சித்தன் மகன் ஞானசம்மந்தன்
20 செந்தமிழ்ச் சந்திர குலத்து வேதியன் மறையோன்
21. பைந்தமிழ் முறையோன் நெறியோன் குருக்கள் மகன்
22. வெந்தழல் கூத்தன் மனைவி தந்த அமுதுண்டவன்
23. பைந்தமிழுக்கு இசைப் பேரிலக்கியம் தந்த வள்ளல்
24. மாரு இளையோனைய் வேறுலகம் சென்ற திருஞானசம்மந்தன்
25 தமிழால் பதினெண் சித்தர் படைத்த இந்துமதம் காத்தே
26. தமிழ்க்குடி மிடிமை அடிமை மடமை போக்கினான்
27. வித்தகத் தமிழில் இசையோடு தத்துவத் தேவாரம்
28. சித்திரமாய்ப் படைத்த தமிழ்ச் சித்தன் திருஞான சம்மந்தன்
29. எத்திற மெல்லாம் கூறியும் நாவுக்கரசர் வாழ்த்தோடு
30 நேத்திறச் சித்திர மதுரை மங்கையர்க்கரசி அன்புக்கு
31. உத்திறவாதமிட்டு அமணர் அனல் புனல் வாதத்துக்கே
32. சூத்திறத் தமிழாய்த் திருஞான சம்பந்தன் புறப்பட்டான்
33. அத்திறமாய் ஆலவாய் அண்ணல் அங்கையற் க்கண்ணி கண்டு
34. தோத்திற முடித்துச் சத்திரத்துத் தங்கச் சமணர்
35. உத்தியால் நெருப்புற்ற சத்திரத்து வெப்பமே
36. சாத்திறச் சம்பந்தனையால் பாண்டியனுக்கு நோயாயிற்று
37. ஆத்திறச் சமணரின் அரும்பாடு வெப்பகற்ற வில்லை.

# குருபாரம்பரியம்

(சென்ற அறிக்கை தொடர்ச்சி)

நாடு முழுவதும் சுரண்டிக் கொள்ளை யடிக்கிறார்கள். ஆனால் தமிழர்களோ இவர்களிடமெல்லாம் கூலிவேலை செய்து கும்பிட்டு வாழுகிறார்கள். இதற்குக் காரணம் தன்மானமழிந்தும் தன்னம்பிக்கையிழந்தும் கோழைகளாகவே வாழக்கூடிய ஏமாளிகளாகத் தமிழர்களை உருவாக்கிட்ட அன்னியரின் வெற்றிதான். இந்த அவலங்களையும் கேவலங்களையும் எளிதில் மாற்றவே முடியாது. ஆனால் முன்னோர்களை வழிபடுவதும் மூத்தோர்களை மதித்துப் பேணிப் பணிந்து வாழ்வதும் தத்துவமாக உடைய 'சித்தர் நெறி' எனும் இந்து மதத்தின் மூலம் அனைத்துவிதமான அவலங்களையும் கேவலங்களையும் அகற்றிடலாம். அதனைத்தான் மத வழிப் புரட்சியே சமுதாய மாற்றத்தை விளைவிக்கும் பண்பாட்டுப் புரட்சியை உருவாக்கி வெற்றியாகத் தரும்.

3. தமிழர்களில், மொழியையும், இனத்தையும், நாட்டையும் காட்டிக் கொடுத்து அன்னியரிடம் பட்டம், பதவி, பணம் பெற்று வாழும் அடிமையுணர்வு மிக்கவர்கள் அதிகமாகிவிட்டார்கள். இவர்களின் பிச்சைக்கார உணர்வும், பேராசை வெறியும், அடிமைச் சிந்தையும், கூலி நெஞ்சும் மாற்றவே முடியாதவை எனவே இவர்களைத் திருத்துவதைவிட இளைஞர்களையும் சிறுஅர்களையும் திருத்திபுதியதோர் பரம்பரையைத் தோற்றுவிப்பதுதான் எளிது. இப்படி ஒரு புதிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் ஆற்றல் 'சித்தர் நெறி' எனப்படும் இந்துமதத்துக்குத்தான் உண்டு எனவே இந்துமத மறுமலர்ச்சிப்பணியால் உருவாகும் தனிமனிதர்களை வைத்து மத வழிப்புரட்சி செய்துதான் இளைஞர்களைத் தன்னம்பிக்கையும், தன்மான உணர்வும் இனப்பற்றும், இனஒற்றுமையும், மொழிப் பற்றும், நாட்டுப்பற்றும் உடையவர்களாக உருவாக்கமுடியும்

4. தமிழர்கள், சொந்தநாட்டிலேயே தன்னம்பிக்கை நலிந்தும், தன்மானம் அழிந்தும், பிச்சைக்காரர்களாக, அடிமைகளாக, கூலிகளாக, எடுபிடிகளாக......... வாழுகிறார்கள். ஆனால் குடமூக்கு, பழையாறை, உறையூர், தொண்டி, முசிறி, காயல்பட்டினம், நாகப்பட்டினம், கொற்கை, மதுரை......முதலிய மாநகரங்களிலும், பேரூர்களிலும், சிற்றூர்களிலும் அன்னியர்களே பட்டுக்கடை, மிட்டாய்க் கடை, வட்டிக்கடை, கூலவாணிகக்கடை மருந்துக்கடை, ஆயுதக்கடை...... முதலிய அனைத்துக்கடைகளையும் நடத்திக்கொள்ளை லாபம் ஈட்டுகின்றனர். பெரும்பாலான மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும் அவர்களின் கையிலேயே இருக்கிறது, அவர்கள் ஆடும் சதுரங்கமே அரசாங்கமாக இருக்கிறது. அவர்கள் ஆட்டுவிக்க ஆடும் பொம்மலாட்டமே நாட்டரசியாக இருக்கிறது. எனவே இந்த அன்னியச் சீமான்களையும், கோமான்களையும், பூமான்களையும் வென்றொழியத் தமிழகத்தைத் தமிழன் ஆளுவது இயலாது. அதற்காகப் பட்டாளமும், படையும், தனிவீரர்களும், நாயகங்களும், தளபதிகளும்......பட்டி தொட்டி முதல் நாடுநகரம் வரை உருவாக்கப்பட்டு நாடுதழுவிய அருட்போர் நிகழ்த்தி அருட் பேரரசு அமைக்க வேண்டும். அதற்கு இந்து மதத்தின் தத்துவமும், சேவலோன் கலைகளும், போர்க்கலைகளும், ஓகாசன, யோகாசனக் கலைகளுமே பயன்பட்டிடும். எனவே இந்துமறுமலர்ச்சிக்காகச் சமுதாய மாற்றம் செய்யும் பண்பாட்டுப் புரட்சியை மத வழியில் நிகழ்த்திடல் வேண்டும்.

5. இந்துமதத்தால்தான் இம்மண்ணுலகத்தின் மூலவர்களும், முதல்வர்களும் காவலர்களுமான தமிழர்களுக்கிடையில் மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும், துரோகிகளாக, விரோதிகளாக, எதிரிகளாக, பகைவர்களாக......... மாறிடும் தனி மனிதர்களைத் திருத்த முடியும்! திருத்தமுடியும்!! திருத்தமுடியும்!!! எனவே, இந்துமதம் கூறும் சிவன் அசுரர் போர், முருகன் அசுரர் போர்,

—தொடரும்

அரசன்தான் [காவலன், மன்னன், வேந்தன், தலைவன்......] மக்களை நாடிச் சென்று குறைகளையும் தேவைகளையும் 'ஆராய்ந்து உற்று அறிந்து ஆவண செய்து மக்களுக்குப் பயனுள்ள வகை வாழ வேண்டும்'- அரச பாரம்பரியத் தத்துவம்.

'கலைஞர்கள் மக்களைச் செம்மைப்படுத்தி மேம்படுத்தப் பயன்படவேண்டும். மக்கள் கலைஞர்களை நலிந்து மெலிந்து நசித்துப் போகாமல் காத்திடப் பயன்படவேண்டும்.'-இலக்கிய பாரம்பரியத் தத்துவம்.

இத்தத்துவங்களுக்கு இலக்கியங்களாகவும், இலக்கணங்களாகவும், அமைவனவே பதினெண் சித்தர் பீடாதிபதிகளின் படைப்புக்கள்.

## அறிக்கையாளர்களுக்கு.........

கடந்த ஆண்டு ரூ. 15/— தந்து மாதந்தோறும் 'குருதேவர்' அறிக்கைப் பெற்றுவந்த அறிக்கையாளர்கள் இவ்வாண்டு (1985) காணிக்கைத் (சந்தா) தொகை ரூ. 15—00 ஐ உடனே M.O. மூலமோ, மாவட்டத் தலைமை அ. வி. தி. நிலையத்தின் மூலமோ விரைந்து பொறுப்பாளர் முகவரிக்கு அனுப்பவும்.

**சி. கவிக்குமார் B. Sc.,**
**56, N. G. O. காலனி, பொன்னேரி-601204.**

## வாசகர்களுக்கு............

'குருதேவர்' அறிக்கை மூலம் பல்வேறு அரிய பெரிய நிறைவானச் செய்திகளை மாதந்தோறும் பன்னிரண்டு ராசிகள் போல் பெற்று வந்தீர்கள் அவற்றின் நிறைவாக 'மலர்' ஒன்றை வெளியிட உள்ளோம். அது பல்வேறு செய்திகளைப் பெற்று பயனுள்ள மலராக வெளிவர உள்ளது. அதன் தனியிதழ் ரூ 5/— மதிப்புள்ளது. தனியிதழுக்கு இன்றே பொறுப்பாளரை அணுகவும்.

# வாழ்கவே சித்தர் நெறி

சித்தர் நெறி சிறந்த நெறி
சீர் நிறைந்த பத்தி நெறி
முத்தி நெறி முதன்மை நெறி
மூவுலகை ஆளும் நெறி
தத்துவங்கள் நிறைந்த நெறி
தாய்மையென மலர்ந்த நெறி
பற்றுடன் படர்ந்த நெறி
பலருக்கும் ஏற்ற நெறி

பிறவியை உணரும் நெறி
பெருங்கடல் நீந்தும் நெறி
வழியினை அறியும் நெறி
வாழ்க்கை நிறையும் நெறி
உரியதை அளிக்கும் நெறி
உண்மையை உணர்த்தும் நெறி
புரிந்து இதை ஏற்றிடுவீர்
புவி போற்ற வாழ்ந்திடுவீர்

**–கவி க. செல்வநாயகம்**

# இறைப்பணியில் இடைத்தரகர்கள்

மனிதர்களே தெய்வம்! மனிதர்கள் தெய்வமாகும் வழி இதுதான் என வரையறுத்துத் தெளிவாகக் கூறும் சித்தர் நெறியாகி, இந்து மதத்தில், இன்று புகுந்துவிட்ட, புகுத்தப்பட்ட பகுத்தறிவற்ற மடமைகளையும் கற்பனைகளையும், களையெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள **பண்பாட்டு இயக்கமே இந்து மறுமலர்ச்சி இயக்கம்.**

இந்து மதத் தத்துவங்களுக்குப் புறம்பாக அண்மையில் திருச்செந்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியை எடுத்தியம்பவே இக்கட்டுரை எழுதப்படுகிறது.

தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிய தாத்தா சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரின் முழுவாரிசாகிய இன்றைய குருமகா சன்னிதானம் சித்தர் கருவூரர் அவர்கள், மனிதர்களின் முற்பிறவி, மறு பிறவி, தரம், திறம் அறிந்து சன்னிதானம், ஆதீனம், இருக்கை...... போன்ற 48 வகை அருட் பட்டங்களை அருட்கொடை வள்ளலாக ஒளிவு மறைவின்றி அளித்துவருகிறார்

இதன்படி சன்னிதானம் தகுதி பெற்ற மூவர் 25—12—84 அன்று சித்தர் நெறிப்படி சன்னிதான உடையணிந்து [சன்னிதானமாகச் செல்லும்போது இடுப்பில் முழங்காலுக்கு மேல் வேட்டியும், மார்பில் ஒன்றுமணியாமல், தலையில் உத்தரீயமும், அணிவது] செல்லும் பொழுது அங்குள்ள பிரமணர்களால் (பிரமண்ணினர்) காரணமின்றித் தடுக்கப்பட்டனர். காரணம் கேட்கப்பட்ட பொழுது தலையில் உத்திரீயம் அணிந்தது தவறு எனக் கூறினர்.

அறிவிப்புப் பலகையில் சட்டையின்றிப் போக வேண்டும் என்றுதானே கூறப்பட்டுள்ளது; மேலும் பலர் தலையில் நாகரீகத் தொப்பிகளுடன் சென்று கொண்டிருக்கின்றனரே எனக் காண்பித்துக் கேட்ட பொழுது

அங்கு கூடியிருந்த சுமார் 100 பிருமணர்கள் "அது அப்படித்தான்! உங்களுக்கு விருப்பமிருந்தால் எங்கள் விருப்பப்படி உள்ளே செல்லுங்கள்; அல்லது திரும்பிப் போங்கள்" -என எடுத்தெறிந்து கூறினர்,

இந்து மதத்தில் எந்தச் சாத்திறத்தில், சம்பிறதாயத்தில், சாங்கியத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது என்றதற்கு இதுவே "ஐதீகம்" என்றனர்.

இருபது வருடங்களுக்கு முன்பு மதிலில் இருக்கும் ஓட்டை வழியேதான் பிருமணரல்லலாதோர் கடவுளைக் காண வேண்டும் என்று "ஐதீகம்" கூறியவர்கள் அல்லவா இவர்கள்!

"இன்றைய சங்கராச்சாரியார் தலையில் முக்காடுடன் வந்தால் அனுமதிக்க மாட்டார்களா?" இந்துமதத் துரோகிகள்.

சிறப்பு தரிசன சீட்டு வாங்கினாலும் உள்ளே விடமாட்டோம் என அரசாங்க அலுவலக நடவடிக்கைகளையே எடுத்தெறிந்து பேசும் இவர்கள் போக்கும்,

நாகரீகத் தொப்பிக்களை அனுமதிப்போமே தவிர சித்தர்நெறி சன்னிதானம் உத்தரீயத்தை அனுமதிக்க மாட்டோம் என்பன போன்ற இந்து மதத் துரோகப் போக்கும் மாற வேண்டும். அல்லது தமிழர்கள் ஒன்று சேர்ந்து மாற்றித் தானுகவேண்டும்

பெரியார் போன்ற மாபெரும் சிந்தனை வாதிகள் போரடியும் இவர்கள் மனப்போக்கு மாறவில்லையென்றால் தமிழர்களின் நிலை என்ன? இந்து மதத்தில் புகுத்தப்பட்ட இருள்தான் நீங்குவது எப்போது?

பத்தர்கள் சிந்திக்கட்டும்!

தன்மானமுள்ளோர் தகர்க்கட்டும் மடமைகளை!!

தமிழர்கள் செயல்படட்டும்!!!

—சித்தரடியான்

KVS அச்சகம், பொன்னேரி.